**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சாத்தான்குளம்**
**முன்னிலை : செல்வி.ம.வி.தேவி ரக்க்ஷா, B.B.A.,L.L.B (Hons)**
**நீதித்துறை நடுவர், சாத்தான்குளம்**
**2026 ஆம் ஆண்டு, ஜுலை மாதம் 28 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 82/2018**
**CNR.No.TNTT11-000463-2018**
*********

<table>
<tr><td>1.</td><td>காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண். (Name of the Police Station and Crime Number of the Offence)</td><td colspan="3"><u>அரசுக்காக,</u><br>காவல் உதவி ஆய்வாளர்,<br>தட்டார்மடம் காவல் நிலையம்,<br>(குற்ற எண். 68/2017)</td></tr>
<tr><td>2.</td><td>எதிரியின் பெயர் (Name)</td><td colspan="3" rowspan="5">திரு. வினித்ராஜ், வயது 52,<br>த/பெ. ரத்தினம்,<br>கீழத்தெரு, படுக்கப்பத்து.<br><br>கூலி</td></tr>
<tr><td>3.</td><td>எதிரியின் தந்தை பெயர் (Father's Name)</td></tr>
<tr><td>4.</td><td>எதிரியின் தொழில் (Occupation)</td></tr>
<tr><td>5.</td><td>எதிரியின் முகவரி (Residence)</td></tr>
<tr><td>6.</td><td>எதிரியின் வயது (Age)</td></tr>
<tr><td>7.</td><td>குற்ற நிகழ்வு நாள் (Occurrence)</td><td colspan="3">18.05.2017</td></tr>
<tr><td>8.</td><td>புகார் தேதி (Complaint)</td><td colspan="3">19.05.2017</td></tr>
<tr><td>9.</td><td>எதிரி கைது செய்யப்பட்ட தேதி (Apprehension)</td><td colspan="3">எதிரி முன்ஜாமீன் பெற்றதால் கைது செய்யப்படவில்லை</td></tr>
<tr><td>10.</td><td>எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் (Release on Bail)</td><td colspan="3">எதிரி முன்ஜாமீன் பெற்றதால் கைது செய்யப்படவில்லை</td></tr>
<tr><td>11.</td><td>Commitment</td><td colspan="3">-----</td></tr>
<tr><td>12.</td><td>விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி (Commencement of Trial)</td><td colspan="3">27.09.2018</td></tr>
<tr><td>13.</td><td>விசாரணை முடிக்கப்பட்ட தேதி (Closure of Trial)</td><td colspan="3">28.07.2026</td></tr>
<tr><td>14.</td><td>தண்டனை அல்லது உத்தரவு (Sentence or Order)</td><td colspan="3">முடிவில், எதிரி இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(ii) இன் கீழான குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, அவரை கு.வி.மு.ச பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.</td></tr>
<tr><td>15.</td><td>தீர்ப்பின் நகல் வழங்குதல் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த முடிவு (Service of Copy of Judgment or Finding on Accused)</td><td colspan="3">எதிரி விடுதலை செய்யப்படுகிறார்</td></tr>
<tr><td>16.</td><td>கு.வி.மு.ச பிரிவு 313(1)(b) இன் கீழ் எதிரியை விசாரணை செய்த நாள் (Date of examination of accused U/s 313(1)(b)</td><td colspan="3">28.07.2026</td></tr>
<tr><td>17.</td><td>சாட்சிகள் முதல் விசாரணை</td><td>சாட்சிகள்</td><td>முதல்</td><td>குறுக்கு</td></tr>
</table>



DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.07.28 16:42:29 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் குறுக்குவிசாரணை செய்யப்பட்ட நாள் (Date of examination in chief and cross examination of witnesses) | | விசாரணை | விசாரணை |
| | | PW1 | 26.03.2026 | --- |
| | | PW2 | 21.07.2026 | 21.07.2026 |
| | | PW3 | 24.07.2026 | 24.07.2026 |
| **18.** | வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் (Date of Cognizance) | 15.12.2018 | | |

இவ்வழக்கானது என் முன்பு 28.07.2026 இன்று இறுதி விசாரணைக்காக வந்தபொழுது எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. ஆரோன் டேவிட் அவர்கள் முன்னிலையாகியும் அரசு தரப்பில் குற்றவியல் வழக்கறிஞர் நிலை-II திருமதி. ப்ரீத்தி ராணி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதத்தை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**<u>தீர்ப்புரை</u>**

**1. <u>குற்றச்சாட்டு</u> :-**

**1.1.** இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான ஆறுமுகராஜ் என்பவருக்கும் எதிரிக்கும் இடையே முன்விரோதம் இருந்து வந்தது. இந்நிலையில் கடந்த 18.05.2017 ஆம் தேதி இரவு 10.00 மணிக்கு படுக்கப்பத்து ஊரில் ரவி மளிகை கடைக்கு எதிரேயுள்ள பூவனேந்திரன் என்பவர் வீட்டு திண்ணையில் புகார்தாரர், சாட்சி 2 முத்துசெல்வன் மற்றும் சாட்சி 3 கதிரேசன் ஆகியோர்களுடன் உட்கார்ந்திருந்தபோது அங்கு வந்த எதிரி சாட்சி 2 ஐ கன்னத்தில் அடித்தார். பின்பு எதிரி அவர் மறைத்து வைத்திருந்த அருவாளை எடுத்து சாட்சி 2 முத்துசெல்வனை வெட்டியதில் அவருடைய இடது கையில் பட்டது. பின்பு எதிரி புகார்தாரரைப் பார்த்து தேவடியா மவனே புண்டாமவனே என ஆபாசமான வார்த்தைகளால் பேசி, புகார்தாரரின் இடது கை மணிக்கட்டின் மேல் பகுதி, இடது கரண்டை கால் பகுதியில் அருவாளால் வெட்டி சாதாரணகாயத்தை ஏற்படுத்தியும், எதிரி புகார்தாரரைப் பார்த்து இன்று நீ தப்பிவிட்டாய் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என கொலைமிரட்டல் விடுத்து குற்றம் புரிந்துள்ளார்.

**1.2.** எனவே, எதிரிக்கு எதிராக இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(ii) இன் கீழான குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளி என்று அரசு தரப்பில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>கு.வி.மு.ச பிரிவு 207 இன் கீழ் நகல்</u> :-**

அரசு தரப்பில் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து ஆவணங்களின் நகல் கு.வி.மு.ச பிரிவு 207-இன் கீழ் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

**3. <u>கு.வி.மு.ச பிரிவு 239 மற்றும் 240 இன் கீழ் விசாரணை</u> :-**

**3.1.** எதிரிக்கு போதுமான கால அவகாசம் கொடுத்த பிறகு, அவர் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கை பற்றி கேட்ட போது, அவர் பொய் வழக்கு என்றும், குற்றவாளி இல்லை என்றும் கூறினார்.

3.2. இருதரப்பிலும் கேட்கப்பட்டு, வழக்கு கோப்புகளை ஆய்வு செய்த போது, எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(ii) இன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைய போதுமான முகத்தோற்ற சான்றுகள் இருந்ததால், எதிரி மீது அதே பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து, குற்ற சாராம்ச சங்கதிகள் குறித்து அவரிடம் விளக்கி கூறிய போது, எதிரி பொய் வழக்கு என்றும், வழக்கு விசாரணை செய்யப்பட வேண்டும் என்றும் கூறினார். ஆகையால் இவ்வழக்கு

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.07.28 16:42:33 +0530

விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4. அரசு தரப்பு சாட்சிகள் :-**

பட்டியல் சாட்சியில் இருந்து இரண்டு நபர்களும் கூடுதல் சாட்சியாக காவல் உதவி ஆய்வாளர் திரு.ஜெயபால் என்பவரும் அ.சா.1 முதல் அ.சா.3 ஆக அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள்; அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கு :-**

**5.1.** அ.சா.2 – ஆறுமுகராஜ் கடந்த 18.05.2017 ஆம் தேதி இரவு 10.00 மணிக்கு படுக்கப்பத்து ஊரில் ரவி மளிகை கடைக்கு எதிரேயுள்ள பூவனேந்திரன் என்பவர் வீட்டு திண்ணையில் அ.சா.2, சாட்சி 2 முத்துசெல்வன் மற்றும் சாட்சி 3 கதிரேசன் ஆகியோர்களுடன் உட்கார்ந்திருந்தபோது அங்கு வந்த எதிரி சாட்சி 2 ஐ கன்னத்தில் அடித்தார். பின்பு எதிரி அவர் மறைத்து வைத்திருந்த அருவாளை எடுத்து சாட்சி 2 முத்துசெல்வனை வெட்டியதில் அவருடைய இடது கையில் பட்டது. பின்பு எதிரி அ.சா.2 ஐ பார்த்து "தேவடியா மவனே புண்டாமவனே" என ஆபாசமான வார்த்தைகளால் பேசி, இடது கை மணிக்கட்டின் மேல் பகுதி, இடது கரண்டை கால் பகுதியில் அருவாளால் வெட்டி சாதாரணகாயத்தை ஏற்படுத்தியும், இன்று நீ தப்பிவிட்டாய் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என கொலைமிரட்டல் விடுத்து அங்கிருந்து சென்றார். பின்பு அவர் சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார்.

**5.2.** கடந்த 19.05.2017 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.ஜாண்சன் என்பவர் நிலையப்பொறுப்பில் இருந்தபோது சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் இருந்த ஆறுமுகராஜ் என்பவரது தகவல் பெற்று சாத்தான்குளம் அரசு மருத்துவமனை சென்று வாக்குமூலம் (அ.சா.ஆ.2) பெற்று அந்த புகார்வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.68/2017, இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(ii) இன் கீழ் முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ.3) பதிவு செய்தார்.

**5.3.** வழக்கை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உதவி ஆய்வாளர் திரு.ஜாண்சன் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராஜகுமாரி, பேச்சிமுத்து ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் (அ.சா.ஆ.4) மற்றும் மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.5) தயார் செய்தார். பின்னர் அவர்கள் இருவரிடமும் தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தார்.

**5.4.** பின்னர் சாத்தான்குளம் மருத்துவமனை சென்று வாதிக்கு ஏற்பட்ட காயத்திற்கு காயச்சான்றிதழ் அளித்த மருத்துவரை விசாரித்து 23.05.2017 அன்று காயச்சான்றிதழ் (அ.சா.ஆ.6) கிடைக்கப்பெற்று வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் 19.05.2017 ஆம் தேதி இவ்வழக்கின் விசாரணை அதிகாரிகளின் விசாரணையின் படி இவ்வழக்கின் 2ஆவது எதிரி வினோத் என்பவர் குற்ற செயலில் ஈடுபடவில்லை என்பதால் அவரை இவ்வழக்கில் இருந்து நீக்கி எதிரி நீக்கல் அறிக்கை (அ.சா.ஆ.7) சமர்ப்பித்தார். காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்களின் புலன் விசாரணையில் இருந்தும், சாட்சிகளின் வாக்குமூலங்களின் அடிப்படையிலும் எதிரி இவ்வழக்கில் குற்றம் புரிந்தது உண்மையென தெரிய வந்ததால் எதிரி மீது 15.08.2017 ஆம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**6. கு.வி.மு.ச பிரிவு 313 (1) (ஆ) இன் கீழ் விசாரணை :-**

**6.1.** மேற்கண்ட அரசு தரப்பு சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றக்கூடிய சாட்சியங்களையும், சூழ்நிலைகளையும் கு.வி.மு.ச பிரிவு 313 (1)(ஆ) இன் கீழ் தொகுத்து, அவரிடம் விளக்கி கேட்ட போது, எதிரி



DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.07.28 16:42:37 +0530

பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும் மறுத்தார்.

**6.2.** மேலும், எதிரி தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்று கூறினார்.

**7. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை :-**

எதிரி மீது வனையப்பட்டுள்ள இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(ii) இன் கீழான குற்றச்சாட்டுகள் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா?

**8. சாட்சியங்கள் மதிப்பீடு :-**

**8.1.** இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட நிகழ்நிலை புகார்தாரரான ஆறுமுகராஜ் அரசு தரப்பில் அ.சா..2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.2 இன் சாட்சியத்தை ஆராயும்போது, அ.சா.2 அவருடைய சாட்சியத்தில், எதிரி அவருடைய சித்தப்பா மகன் என்றும், எதிரி உறவினர் என்பதால் தற்போது இருவரும் சமாதானம் ஆகிவிட்டதாகவும், அவர்களை சமாதானமாக போகும்படி யாரும் தூண்டவில்லை என்றும், வழக்கு சம்பவம் குறித்து அவருக்கு எதுவும் தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**8.2.** கண்ணுற்ற சாட்சியான முத்துச்செல்வன் அரசு தரப்பில் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.1 அவருடைய சாட்சியத்தில், வழக்கு சம்பவம் குறித்து அவருக்கு எதுவும் தெரியாது என்று சாட்சியமளித்துள்ளார்.

**8.3.** இந்த வழக்கில் அ.சா.2 – ஆறுமுகராஜ் கொடுத்ததாக உள்ள புகார்வாக்குமூலத்திற்கும், அதன் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ள அரசு தரப்பு வழக்கிற்கும் முரணாக அவர் சாட்சியம் அளித்ததால் அரசு தரப்பில் அவரை பிறழ் சாட்சியாக்கி குறுக்குவிசாரணை செய்தபோதிலும் அவரிடமிருந்து அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக எந்தவொரு சங்கதிகளும் வெளிக்கொணரப்படவில்லை.

**8.4.** மேலும், அ.சா.ஆ.2 – புகார்வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து அவருடையது என்று அ.சா.2 – ஆறுமுகராஜ் ஒப்புக்கொண்ட போதிலும், அதில் எழுதியுள்ள வாசகங்களை உறுதிபடுத்த சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. ஆகையால், இந்த வழக்கில் கொடுக்கப்பட்டுள்ளதாக உள்ள புகார்வாக்குமூலம் அ.சா.1 – ஆறுமுகராஜ் ஆல் கொடுக்கப்பட்டதா? என்பதும் சந்தேகம் கொள்ளும் வகையில் அமைகிறது. ஆவணத்தில் உள்ள கையொப்பத்தை நிரூபிப்பது வேறு, அதன் உள்ளடக்கத்தை நிரூபிப்பது வேறு என்பதால், அ.சா.2 – ஆறுமுகராஜின் சாட்சியம் மூலம் அ.சா.ஆ.2 புகார்வாக்குமூலம் அவரால் கொடுக்கப்பட்டது என்று நிரூபிக்கப்படவில்லை.

**8.5.** தவிர, அ.சா.2 தற்போது எதிரியுடன் சமாதானமாகிவிட்டதாகவும், வழக்கு சம்பந்தமாக அவருக்கு எதுவும் தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளதால், அரசு தரப்பில் இதர சாட்சிகள் விலக்கிக்கொள்ளப்பட்டு கூடுதல் சாட்சியாக காவல் உதவி ஆய்வாளர் ஜெயபால் என்பவர் அ.சா.3 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவருடைய சாட்சியத்தை தவிர இந்த வழக்கில் எதிரிக்கு எதிராக வேறு சாட்சியம் எதுவும் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இந்த சூழ்நிலையில், புலன்விசாரணை கோப்புகளை பார்த்து சாட்சியமளித்துள்ள உதவி ஆய்வாளரின் சாட்சியம் மட்டுமே எதிரியை குற்றவாளி என்று முடிவு செய்ய போதுமானதல்ல.

**8.6.** இதன் மேலே செய்யப்பட்ட பரிசீலனைகளின் ஒட்டுமொத்த தொகுப்பாக, அரசு தரப்பு வழக்கு நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படாததால் எதிரிக்கு இந்த வழக்கில் சந்தேகத்தின் பலன் கிடைக்கக் கூடியது என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**9. முடிவு:-**

DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.07.28 16:42:41 +0530

**9.1.** முடிவில், எதிரி இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(ii) இன் கீழான குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, அவரை கு.வி.மு.ச பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**9.2.** இவ்வழக்கில் எதிரி ஆஜராக எழுதிக் கொடுத்த பிணை ஆவணம் இரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

**9.3.** இவ்வழக்கில் சொத்துப்பொருள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இத்தீர்ப்புரை, என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டும், என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டும், இன்று 28.07.2026 ஆம் தேதி திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.07.28 16:42:52 +0530

நீதித்துறை நடுவர்,
சாத்தான்குளம்.

**பிற்சேர்க்கை**

**1. அரசு தரப்பு சாட்சிகள் :-**

| அரசு தரப்பு சாட்சிகள் வரிசை எண் | அரசு தரப்பு சாட்சிகளின் பெயர் | அரசு தரப்பு சாட்சிகளின் விவரம் |
|---|---|---|
| அ.சா.1 | திரு. முத்துச்செல்வன் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.2 | திரு. ஆறுமுகராஜ் | நிகழ்நிலை புகார்தாரர் |
| அ.சா.3 | திரு. ஜெயபால் | காவல் உதவி ஆய்வாளர் |

**2. அரசு தரப்பு சான்றாவணங்கள் :-**

| வரிசை எண் | தேதி | ஆவண விபரம் | நிரூபணம் |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 19.05.2017 | புகார்வாக்குமூலத்தில் உள்ள அ.சா.2 இன் கையெழுத்து | அ.சா.2 இன் மூலமாக |
| அ.சா.ஆ.2 | 19.05.2017 | புகார்வாக்குமூலம் | அ.சா.3 இன் மூலமாக |
| அ.சா.ஆ.3 | 19.05.2017 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.3 இன் மூலமாக |
| அ.சா.ஆ.4 | 19.05.2017 | பார்வைமகஜர் | அ.சா.3 இன் மூலமாக |
| அ.சா.ஆ.5 | 19.05.2017 | மாதிரி வரைபடம் | அ.சா.3 இன் மூலமாக |
| அ.சா.ஆ.6 | 18.05.2017 | அ.சா.2இன் காயச்சான்றிதழ் | அ.சா.3 இன் மூலமாக |
| அ.சா.ஆ.7 | 19.05.2017 | எதிரி நீக்கல் அறிக்கை | அ.சா.3 இன் மூலமாக |

**3. அரசு தரப்பு சான்று பொருள் :-**இல்லை

**4. எதிரி தரப்பு சாட்சிகள் :-** இல்லை

**5. எதிரி தரப்பு சான்றாவணங்கள் :-** இல்லை

**6. எதிரி தரப்பு சான்று பொருட்கள் :-** இல்லை

**Case Summary**

**1.** எதிரி சிறையில் இருந்த நாட்கள் **:-** இல்லை

**2.** குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் - 15.12.2018

**3.** எதிரி முதலாவதாக விசாரிக்கப்பட்ட நாள் - 27.09.2018

**4.** எதிரி மீதான குற்றச்சாட்டு விளக்கி கேட்ட நாள் - 27.09.2018

**5.** இடைக்கால மனு விபரம் **:** இல்லை

**6.** எதிரி தலைமறைவாக இருந்த விவரம் **:** இல்லை

**7.** மாண்பமை மேல் நீதிமன்ற தடை உத்தரவு விபரம் - இல்லை

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.07.28 16:43:00 +0530

நீதித்துறை நடுவர்
சாத்தான்குளம்

**குறிப்பு :-**

**1.** விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்தார்.

**2.** சாட்சிகள் 3 வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

**3.** தீர்ப்பு விபரம் காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.